# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.107/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சரவணன் | த–பெ | சிவானந்த சுந்தரம் |
| ஊர்: | : | இலுப்பங்குடி | | |
| வயது: | : | 47/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | பைனான்ஸ் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர் .**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் இலுப்பங்குடியில் வசித்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் அரியக்குடி கோவிலுக்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது தென் திருப்பதி நகரில் சம்பவ சாலையில் நபர் ஒருவர் விழுந்து கிடந்தார். மற்றபடி அவருக்கு என்ன நடந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாணை செய்யவில்லை. யாருக்கு விபத்து எப்படி நடந்தது, யார் யார் மீது மோதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரரனை

போலீசார் விசாரணையில் கடந்த 11.01.2020 அன்று மாலை 6.00 மணியளவில் அரியக்குடி தென் திருப்பதி நகர் அருகே சென்று கொண்டிருந்த போது TN 63 BX 1077 என்ற பதிவெண் கொண்ட Super XL வாகனத்தல் நபர் ஒருவர் சென்று கொண்டிருந்த போது சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் TN 63 BY 1675 என்ற பதிவெண் கொண்ட TVS அப்பாச்சி வாகனம் அதிவேகமாகவும், அஜாக்கிரதயாகவும் அவர் மீது மோதியதில் XL வாகனத்தில் சென்ற நபருக்கு தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு மயக்க நிலையில் இருந்ததாகவும், விபத்து சம்பவத்தை நேரடியாக பார்த்து சொல்லி விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:44:12 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**

**STC. No.107/2025 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராமநாதன் | த–பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கார் வாஷ் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்படுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து கார் வாஷ் கடை வைத்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் அ.சா.ஆ.2.** தேதி மாதம் நினைவில்லை. சுமார் 8 மாதத்திற்கு முன்பு விபத்து ஒன்று தொடர்பாக போலீசார் விசாரணை செய்து சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து நான் கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விவரம் இருந்தது என்று எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:44:18 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.107/2025 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கிருஷ்ணன் | த–பெ | முத்து |
| ஊர்: | : | கள்ளி வயல் | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விறகு வெட்டுதல் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கள்ளி வயலில் வசித்து விறகு வெட்டும் தொழில் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அரியக்குடி ஏசு கோவிலில் வேலை பார்த்து விட்டு XL இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு 4.45 மணி கிளம்பி சென்று கொண்டிருந்தேன். சம்பவ சாலையில் சம்பவ நேரத்தில் நான் மேற்கு திசை நோக்கி சென்று கொண்டிருந்தேன். அப்போது கிழக்கில் இருந்து மேற்காக பெரிய இருசக்கர வாகனத்தில் (பதிவு எண் இல்லாத புதிய வாகனம் ) ரயில்வே கேட்டில் இருந்து போலீசார் ஒருவர் அவரை துரத்தி கொண்டு வந்தார். மேற்படி நபர் இருசக்கர வாகனத்தில் வந்து எனது இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் நான் பள்ளத்தில் விழுந்து விட்டேன். இதில் எனக்கு வலது கை மற்றும் வலது கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. என்னுடைய தலை தவிர உடம்பு முழுவதும் காயங்கள் ஏற்பட்டது. பின்னர் என்னை சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனையில் போலீசார் மற்றும் எனது உறவினர்கள் அனுமதித்தார்கள். மருத்துவர்கள் எனக்கு சிகிச்சை மேற்கொண்டார்கள். பின்னர் மேல் சிகிச்சைக்காக என்னை மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்தை ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரியா என்றால் இல்லை. போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்தார்கள். விபத்து சமயத்தின் போது நான் மயக்கம் அடைந்து விட்டதால் என்னுடைய வாகனத்தின் மீது மோதிய நபரை நான் சரியாக பார்க்கவில்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கின் சாட்சி சுமதி எனது உறவினர் என்றால் சரிதான். சாட்சி ராஜேந்திரன் எனது மச்சினன் என்றால் சரிதான். சாட்சி ராமநாதன் மற்றும் மூவேந்தர் இருவரும் எனது மாப்பிள்ளை ஆவர்கள் என்றால் சரிதான். நான் அரியக்குடி கிழக்கு புறத்தில் இருந்து பிரதான சாலைக்கு குறுக்கு சாலை வழியாக ஏறினேன் என்றால் சரிதான். நான் மெயின் ரோட்டில் வடக்கு மற்றும் தெற்கு நோக்கி வரும் வாகனங்களை நான் பார்த்து தான் கடந்திருக்க வேண்டும் என்றால் அந்த சாலையில் வண்டிகள் வராது. நான் அவ்வாறு கவணிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நேரம் மாலை 6.00

இருக்குமா என்றால் இல்லை 4.30 மணி. எனக்கு வயோதிகத்தின் காரணமாக கண் பார்வை சரியில்ல என்றால் சரியல்ல. எதிரி முறையாக வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்லும் பிரதான சாலையில்தான் சென்றார் நான் தான் கவனம் இல்லாமல் குறுக்கு சாலை வழியாக வந்து ஏறியதால் நான் தான் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:44:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.